மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.123/2022

வாக்குமூலம்: வா.சா.1 நாகராஜன்

12.08.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :– 1ம் பிரதிவாதி உங்களுடைய பையன் என்றால் சரிதான். அவர் அல்லாமல் உங்களுக்கு 3 பெண் குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கும் வழக்குச்சொத்துக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் கல் பட்டறை வைத்துள்ளார். சிற்பம் செய்யும் வேலை செய்து வருகிறார். தாவா 1,2,3 லக்கச்சொத்தில் நீங்கள் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் சரிதான். முதலில் உங்கள் மகன் 1ம் பிரதிவாதி உங்களுடன் அதே சொத்தில் குடும்பத்துடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். நீங்கள் கல் பட்டறை சொத்துக்களை உங்கள் மகனுக்கு தருவதாகவும், 1,2,3 லக்கச் சொத்துக்களை உங்கள் மகள்களுக்கு தருவதகா நீங்கள் சொன்னதால் 1ம் பிரதிவாதி தனியாக வேறு வீட்டிற்கு குடியேறிவிட்டார் என்றால் சரியல்ல, மாமியார், மருமகள் பிரச்சனை காரணமாக என் மகன் தனிக்குடித்தனம் சென்றுவிட்டார். 1,2,3 லக்கச்சொத்துக்களை வழக்கிற்கு பிறகு உங்களுடைய மகள் சாவித்திரிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டீர்கள் என்றால் சரிதான். 5,6,7,8 லக்க வழக்குச் சொத்துக்கள் உங்கள் பெயரில் உள்ள சிற்பக்கூடம் என்றால் சரிதான். அதற்கு பின்புறம் கிழபக்கத்தில் உங்கள் மகன் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் இடத்தில்தான் கற்களை சிற்பங்களாக வடிவமைக்கும் மின் இயந்திரம் உள்ளது என்றால் சரிதான். அதற்காக 1ம் பிரதிவாதி வங்கி கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவருடைய தனிப்பட்ட இடத்திற்கு வழக்கு 5,6,7,8 லக்கச்சொத்துக்கள் வழியாகத்தான் செல்ல முடியும் என்றால் 1ம் பிரதிவாதி சொத்துக்கு தென்புறத்தில் தனியாக பாதை உள்ளது. தற்பொழுது 5,6,7,8 லக்கச் சொத்துக்களில் உள்ள பிரதான நுழைவாயில் வழியாகத்தான் அவருடைய சொத்துக்கும் 1ம் பிரதிவாதி சென்று வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் இடத்தில் உள்ள இயந்திரத்தினை இன்றுவரை நீங்களும் பயன்படுத்தி வருகிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் சொல்வதுபோல் 1ம் பிரதிவாதி உங்களுடைய தொழிலுக்கு எவ்வித இடையுறும் செய்யவில்லை என்றும், நான்தான் அவருடைய தொழிலுக்கு இடையூறு செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. இதுவரை நான்தான் தாவா 5,6,7,8 லக்கமிட்ட சொத்துக்களை நிர்வாகம் செய்து வருகிறேன். 1ம் பிரதிவாதி அங்கு வந்து செல்கிறார். இப்போதே முழுச்சொத்தையும் கிரையம் செய்து

கொடுக்க கேட்கிறார். நான் என் வாழ்நாளுக்குப் பிறகு தருவதாக கூறிவருகிறேன். அதை அவர் ஏற்கவில்லை. அதுதான் பிரச்சனை. 4 லக்க சொத்துக்கு வடபுறத்தில் 1ம் பிரதிவாதி தனியாக வாடகைக்கு கல்லில் பெயர் பொறிக்கும் அலுவலகம் வைத்துள்ளார் என்றால் சரிதான். அதற்காக வாங்கும் கற்கள் 4 லக்கச் சொத்தில் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4 லக்கச்சொத்திற்கு மேல்புறத்தில் உங்கள் மகள் செல்வராணியின் வீடு உள்ளது என்றால் சரிதான். 4 லக்கச்சொத்து மற்றும் செல்வராணி வீட்டுக்கு இடையில் 5 அடி தென்வடல் பாதை உள்ளது என்றால் சரிதான். பழைய தாராபுரம் ரோட்டிலிருந்து கீழ்வடம்போக்கி வீதி வழியாக மேற்படி 5 அடி பாதையை அடைய முடியும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வாடகைக்கு உள்ள இடத்திற்கு தென்புறம் 4 லக்க சொத்தின் வடபுறத்தில் வழி இல்லை என்றும், அதை செல்வராணி வேண்டுமென்றே வழியாக பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் அந்த சொத்தை சொந்தமாக வைத்துள்ளன். என் மகள் அவருடைய வீட்டிற்கு செல்ல 4ம் லக்க சொத்தை பயன்படுத்துவதை 1ம் பிரதிவாதி ஆட்சேபணை செய்கிறார். அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. 4 லக்க சொத்து ஆரம்பத்தில் உங்கள் தாயாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். 4 லக்கச்சொத்தை உங்கள் தாயார் 1ம் பிரதிவாதிக்கு உயில் மூலம் கொடுத்தார் என்றும், அதை நீங்கள் மறைத்து உங்கள் பெயரில் பட்டா பெற்றுள்ளீர் என்றால் சரியல்ல. அந்த சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல. சட்டப்படி எனக்கு மட்டும்தான் அது சேரும். உங்களுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், உங்களுடைய மருமகன் சிவசாமிக்கும், 1ம் பிரதிவாதிக்கும்தான் பிரசச்னை என்றும், சிவசாமியின் தூண்டுதலின்பேரில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும்தான் பிரச்சனை. வேறு யாருக்கும் பிரச்சனை இல்லை. நான் ஏற்கனவே நான்கு சொத்துக்களை என் மகனுக்கு கொடுத்துள்ளேன். அவ்வாறு நீங்கள் கொடுத்த சொத்தின் அசல் ஆவணம் உங்களிடம் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஒரு சொத்தினை வங்கியில் அசல் ஆவணத்தை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கிற்குப் பிறகு 24.08.2023ம் தேதி நீங்களும், உங்கள் மனைவி ராஜேஸ்வரி, 1ம் பிரதிவாதி பார்த்திபன் ஆகியோர்கள் சேர்ந்து ஒரு ஆவணம் உங்களிடம் காட்டப்படும் உறுதிமொழிப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டீர்கள் என்றால் நான் ஒரு கோவில் கும்பாபிஷேகத்திற்கு சிலை செய்து தர வேண்டிய கட்டாயத்தில் இருந்தபோது கற்சிலை கூடத்தை 1ம் பிரதிவாதி பூட்டி வைத்து மிரட்டி எங்களிடம் அந்த கையொப்பம் வாங்கினார். அதனால் பிரச்சனையை

தவிர்க்கும்பொருட்டு அதில் கையொப்பம் போட்டு கொடுத்தேன். (சாட்சி மேற்படி ஆவணத்தில் மிரட்டி கையொப்பம் பெறப்பட்டது என கூறியதால் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை. அதன் நகல் ஒன்று மட்டும் வழக்கு கோப்பில் பெற்று வைக்கப்பட்டது). தற்பொழுதும் உங்கள் சிற்பக்கூடத்தில் நீங்கள் செய்யும் சிலைகளுக்கு உங்கள் மகன் 1ம் பிரதிவாதிதான் முகம் வடிவமைக்கிறார் என்றால் சரியல்ல. நான்தான் அனைத்து வேலைகளையும் செய்து வருகிறேன். 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் செய்யும் சிலைகளுக்கும் நீங்கள்தான் முகம் வடிவமைக்கிறீர்கள் என்றால் சரிதான். 27.11.2022ம் தேதி 1ம் பிரதிவாதி அனைத்து சொத்துக்களிலும் உங்களுக்கு இடையூறு செய்தார் என்றால் ஆமாம், பூட்டி வைத்து இடையூறு செய்தார். 1ம் பிரதிவாதி அவ்வாறு அனைத்து சொத்திலும் ஒரே சமயத்தில் பிரச்சனை செய்ய வாய்ப்பில்லை என்றால், பட்டறையில் மட்டும் ஆட்கள் வேலை செய்யக்கூடாது என பிரச்சனை செய்தார். நான் சிலைகள் செய்ய ஒப்பந்தம் செய்து அந்த கெடுவிற்குள் சிலை செய்து கொடுக்கவில்லை என்றால் எனக்கு அசிங்கமாய் போய்விடும். உங்கள் மகன் சிலை செய்வது சம்பந்தமாக வெளி நாட்டில் படித்துள்ளார் என்றால் சரியல்ல, அவர் எம்.டெக்., படித்துள்ளார். அது வெளிநாட்டில் படித்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி உங்களுக்கு எப்போதும் சொத்துக்களில் உங்களுடைய அனுபவத்திற்கு இடையூறு செய்யவில்லை என்றும், நீங்கள் உங்கள் மகள்கள் மற்றும் மருமகன்கள் தூண்டுதலின்பேரில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளே ன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u> இல்லை.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

Sd/–R.Karthikeyan
District Munsif,
Palani.